முருகப்பெருமான் துணை

**மகான் பராசரிஷி அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.05.2022, திங்கட்கிழமை

1. ஓங்கார பிரம்ம வடிவே
ஓங்கார ஞானச் சுடரே
ஓங்காரமாக வந்த குருவே
ஓங்காரனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது விடை திங்கள்
குறைவிலா உபய திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 02 ம் நாள், 16.05.2022 திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு பராசரிஷி யானும்
3. யானும் உலகநலம் காண உரைப்பேன்
உண்மையான ஞான வாழ்வும்
ஞானவான்களாக ஆற்றல் பலமும்
நடப்புக் காலமே அடைந்து உலகோர்
4. உலகோர் பிறவிப் பயனை
உயர்வாய் அடைந்து சிறக்க
உலகமாற்றம் செய்ய வந்த
உயர் ஞானி அரங்கன் திருவடி பற்றி
5. பற்றியே பண்பான மக்களாய்
பணிந்து சன்மார்க்க வழியை
பற்றித் தொடரவே மாற்றம்
பழுதில்லா உடன் காணும்
6. காணவே ஆற்றல்மிக்க ஞானி
கலிமீட்பின் வேலவன் சூட்சும
ஞானகுருவை நம்பிவிட்டால்
நல்லதே நடக்கும் நடைமுறை எல்லாம்
7. எல்லாம் சாதகமாக மாறும்
இடர்கள் என்பதே இல்லா வண்ணம்
வல்லமை கூடி சமத்துவம்
வளர்ச்சி நிலைகளாக மாறும்
8. மாறுதல் தரும் மாதவசி
மக்களை காக்கும் ஞானி
ஆறுமுக அரங்கமகானே
ஆபத்தை வென்று ஆறுதல் தரும்
9. ஆறுதல் தரும் ஆறுமுகக் கடவுள்
அனுகி சரணடைவு காண
மாறுதல் எல்லா வகையும்
மனம் அமைதிபெற மதிப்புக் கூடிட நடக்கும்

10. நடக்கவே எங்கும் எதிலும்
ஞானமாக நல்ல குருவாக
இடர் வெல்ல வானவர்கள்
இணைந்து அனுப்பிய குரு

11. குருவரங்கனே மக்களின் துன்பம்
குறைவின்றி போக்கிக் காக்கும்
பேருலக காப்புச் சக்தியாகும்
பின்பற்றி வணங்கிவர பாதுகாப்புக் கூடும்
அருளாசி முற்றே

—சுபம்—